முருகப்பெருமான் துணை

**மகான் பீர்முகமது அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.10.2021, புதன்கிழமை

1. அண்ணலே அற்புதம் நிறைந்த
ஆறுமுகனாக வாழும் வள்ளலே
உன்னருள் தயவை உலகம்
உயர்வாய் ஏற்கவே உலகமாற்றம்
2. மாற்றம் நிகழும் எனக் கூறி
மண்ணுலகில் துல்லிய ஆசி
ஆற்றல்பட பிலவ தரிவை திங்கள்
அய்யைந்தீர் திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 27ம் நாள், 13.10.2021 புதன்கிழமை)
3. வாரமதில் மாற்றம் உலகடைய
வழங்குவேன் பீர்முகமது யானும்
சோரமில்லா நிலைகள் அடைய
சுருதிபடி அரங்கன் தருமபலம்
4. பலமதை உலகம் அடைய
பசிபிணி உலகினில் அகலும்
வலம்வரும் மக்களிடை தயவு
வளரும் உயர் ஞானமாக
5. ஆகவே அரங்கஞானி காட்டும்
ஆக்கமான சேவைகளும்
யுகமாற்றக் கொள்கைகளும் கூட
உயர் சக்தியாக மக்களிடை பரவி
6. பரவியே ஐயமற மாற்றங்களை
பாருலகமே அடையக் கூடும்
தரணியில் ஏற்றுவரும் மக்கள்
தவசி எனும் ஞானநிலை அடைந்து
7. அடைந்துமே அரங்கன் வந்த
அவதார நோக்கம் பூர்த்திபட
தடையின்றி சேவை கலந்து
தவராஜனை உலகோர் பின் தொடர
8. தொடர வழிவகை செய்து
தொடர் தொண்டாற்றி இனிதே
இடர்கள் அனைத்தும் வென்று
ஏழாம்படைவீட்டின் சக்தி வழி

9. சக்திவழி பூரண பலமுற்று
சகலரும் ஞானவான்களாகி
யுக்திபல உலகோர் அரங்கன்வழி
உயர்வாய் கண்டுத் தேறுவர்
10. தேறிட அரங்கன் வழி ஞானம்
தெய்வபலமாக திருவருளாக வர
ஆறுதல் தேடிஅனைவருக்குமே
அரங்கன் தீட்சை ஆசி பலமாக இருக்க
11. இருக்கவே சிவதீட்சை ஞானதீட்சை
ஏழாம்படைவீட்டிலிருந்து பெறுபவர்கள்
வருத்தம் கொள்ள கடைபிடிக்க
வாழும் காலமே ஞானிகள் ஆவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

மகான் பீர்முகமது உயிர்கொலை தவிர்த்து சுத்த சைவ உணவினை மேற்க்கொண்டவர். மகான் அகத்தியர் திருவடியை உள்ளம் உருகி பூசித்து ஆசிப்பெற்றவர்.

இல்லை! இல்லை!! சைவத்தை கடைபிடிக்காத மக்களுக்கு ஞான வாழ்வு!